







We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## ஜனவரி - 2019

*We Are Here..!! To Guide You..!!*









# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (Current Affairs)

## ஜனவரி - 30.01.2019

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விருதுகள்
- பொருளாதார நிகழ்வுகள்
- முக்கிய தினங்கள்













# இந்திய நிகழ்வுகள்

- பாதுகாப்பு அமைச்சகமானது **70வது குடியரசு தினத்தில் “RDP இந்தியா – 2019”** எனும் கைபேசி செயலியை தொடங்கியுள்ளது. இந்த செயலியை பயன்படுத்தி இந்த ஆண்டு ராஜபாதையில் நடைபெற்ற குடியரசு தின விழா அணிவகுப்பின் சிறப்பம்சங்களை காண முடியும்.
    - இந்த முன்முயற்சி அரசின் **“டிஜிட்டல் இந்தியா”** பிரச்சாரத்துடன் ஒத்திசைந்துள்ளது.

- **மனிதாபிமான சுரங்க நடவடிக்கைகள் மற்றும் கூட்டு சமாதான நடவடிக்கைகளில் இராணுவங்களை ஒருங்கிணைப்பதை** நோக்கமாகக் கொண்ட, **இந்தியா ஆப்ரிக்கா** களப்பயிற்சியானது (IAFTX – 2019 – Indian Africa Field Training Exercise) **மார்ச் 18** முதல் மார்ச் 27 வரை புனேவில் நடைபெற உள்ளது.
    - **IAFTX** கூட்டுப் பயிற்சியானது இந்தியா மற்றும் 12 ஆப்ரிக்க நாடுகளுக்கிடையே நடத்தப்பட உள்ளது.

- பக்கே புலிகள் காப்பகத்தில் உள்ள ஹார்பில் பறவைகளைப் பாதுகாக்கும் **“நியாசி பழங்குடியினரின்” முன்முயற்சியை அங்கீகரிப்பதற்காக, அருணாச்சலப் பிரதேச மாநில அரசானது, “பக்கே பகா ஹார்ன்பில் திருவிழாவை”** மாநில திருவிழாவாக அறிவித்துள்ளது.
    - இத்திருவிழாவானது 2015 முதல் கொண்டாடப்பட்டு வருகிறது.

# உலக நிகழ்வுகள்

- **உலக எஃகு ஆணையம்** சமீபத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில், **2018ம்** ஆண்டில், **எஃகு உற்பத்தியில் ஜப்பானைப் பின்னுக்குத் தள்ளி, இந்தியா 2வது** இடத்தைப் பிடித்துள்ளது.
    - உலக எஃகு உற்பத்தியில் தொடர்ந்து **சீனா முதலிடத்தில்** நீடிக்கிறது.

- இந்தியாவிற்கு அருகில் உள்ள நாடான **பாகிஸ்தான்** சமீபத்தில் **கரும்புச் சாற்றை** (Sugarcane Juice) **“தேசிய பானமாக”** (National Drink) அறிவித்துள்ளது.

## விருதுகள்

- **2018ம்** ஆண்டுக்கான, **சாகித்ய அகாதெமியின் சிறந்த மொழி பெயர்ப்புக்கான விருது முயூசி.ஃ.ப்பிற்கு** (கன்னியாகுமரி) கிடைத்துள்ளது.
    - இவருக்கு, இந்து கோபனின் **"மணியன் பிள்ளையட ஆத்ம கதா"** என்ற மலையாள சுயசரிதையை **"திருடன் மணியன் பிள்ளை"** என்ற பெயரில் மொழி பெயர்த்தற்காக இவ்விருது வழங்கப்பட்டது.

## பொருளாதார நிகழ்வுகள்

- மத்திய அமைச்சரவையானது **தேசிய சரக்கு மற்றும் சேவை வரிகளுக்கான மேல் முறையீட்டு தீர்ப்பாயத்தை** (GSTAT – Goods and Service Tax Appellate Tribunal) உருவாக்க ஒப்புதல் வழங்கியுள்ளது.
    - இந்த, தேசிய சரக்கு மற்றும் சேவை வரிகளுக்கான மேல் முறையீட்டு தீர்ப்பாயமானது **புதுடெல்லியில்** அமையவுள்ளது.

## முக்கிய தினங்கள்

- **சர்வதேச இனப்படுகொலை நினைவு தினம் - ஜனவரி 27** (International Holocaust Remembrance Day)
    - **இரண்டாம் உலகப் போரின் போது ஏற்பட்ட இனப் படுகொலையை நினைவு கூறுவதற்காக** ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 27ம் நாள் உலகம் முழுவதும் சர்வதேச இனப்படுகொலை நினைவு தினமாக அனுசரிக்கப்படுகிறது.
    - **2005ம்** ஆண்டு ஐக்கியநாடுகள் பொதுசபை தீர்மானத்தின் மூலம் இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.

We Shine Academy™